பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 09 2025 SUNDAY 7.15 PM

ஆகாஷவாணி

*தலைப்புச் செய்திகள்*

1. மொழி வேறுபாடுகளை கடந்து நம் நாடு தர்மத்தினால் ஒன்றிணைக்கப்பட்டு ஒற்றுமையுடன் திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் நக்சல் பிரச்சினை 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மத்திய பார்வையாளர்கள் நியமனம் செய்யப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

4. இந்தியாவின் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கைக்கு ரஷ்யா முழு ஆதரவு அளித்து வருவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Sergey Lavrov தெரிவித்துள்ளார்.

**5.** ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மொழி வேறுபாடுகளை கடந்து நம் நாடு தர்மத்தினால் ஒன்றிணைக்கப்பட்டு ஒற்றுமையுடன் திகழ்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் சாகித்ய அகடமி ஏற்பாடு செய்த இலக்கிய விழாவில் பங்கேற்று பேசிய அவர், நம் நாட்டில் உள்ள மொழிகள், இலக்கியம், கலாச்சாரம் ஆகியன அனைத்து மக்களையும் ஒன்றிணைக்க உதவுவதாக கூறினார்.

2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பே, பீகாரின் வைஷாலியில் ஜனநாயகம் தழைத்தோங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

அகிம்சை கொள்கையை வலியுறுத்திய பகவான் மகாவீரர் வாழ்ந்த பூமி இது என்றும், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையின்கீழ் சம்புர்ண கிரந்தி இயக்கத்தினால் இங்கு பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் நக்சல் பிரச்சினை 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற "நக்சல் இல்லா இந்தியா" நிகழ்ச்சியில் பேசிய அவர், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நக்சலைட் பிரச்சினை முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீர், வடகிழக்குப்பகுதி மற்றும் இடதுசாரி தீவிரவாத இயக்கங்கள் செயல்படும் பகுதிகளில் தேச பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அசம்பாவிதங்கள் நிகழ்ந்து வந்ததாகவும், பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளாக அச்சம்பவங்கள் பெருமளவில் குறைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சவாலை எதிர்கொள்ளும் வகையில், நீண்டகால உத்திகளை மத்திய அரசு பின்பற்றி வருவதாக திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

புதுதில்லியில் நடைபெற்ற உலக உணவு இந்தியா மாநாட்டில் ஒரு லட்சம் கோடி ரூபாய் முதலீட்டு வாய்ப்புகள் பெறப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இம்மாநாடு இன்று நிறைவடைந்த நிலையில், அதுதொடர்பாக உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், இந்த மாநாட்டின்போது 26 உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் மூலம், 64 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நேரடி வேலைவாய்ப்பினை பெறுவார்கள் என்றும், பத்து லட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பால், இறைச்சி, எண்ணெய் உட்பட பல்வேறு பொருட்களுக்கான உணவு பதப்படுத்துதல் அலகுகளை ஏற்படுத்தும் வகையில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு-குறு நடுத்தர தொழில்துறை பெரும் பங்களிப்பினை தந்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜித்தன் ராம் மாஞ்சி தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் இன்று நடைபெற்ற சேவா பர்வ் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கான பயிற்சிகள், சாதனங்கள்,

வங்கிக்கடனுதவிகளை அமைச்சகம் வழங்கி வருவதாக கூறினார்.

மேலும், உள்ளூர் கைவினைக்கலைஞர்களின் படைப்புகள் இடம்பெற்ற கண்காட்சியையும் திரு ஜித்தன் ராம் மாஞ்சி தொடங்கிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே, பிரதமரின் விஷ்வ கர்மா திட்டம், உத்யம் தள பதிவு, உள்ளிட்டவை வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் தொழில் முனைவோர்கள் அதிக அளவில் பங்கேற்க வகை செய்து வருவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் பல்வேறு மாநிலங்களில் உள்ள எட்டு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் மத்திய பார்வையாளர்களை நியமனம் செய்வதாக தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது.

நேர்மையான, வெளிப்படையான முறையில் தேர்தல் நடத்தப்படுவதை உறுதிசெய்யும் இப்பணியில், 320 ஆட்சிப்பணி அலுவலர்கள் மற்றும் 60 காவல் பணி அலுவலர்கள் உட்பட 470 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் தேர்தல் பணிகளை கண்காணிப்பதோடு, அதிக அளவில் மக்கள் வாக்களிக்கும் வகையில் விழிப்புணர்வு பணிகளில் இவர்கள் ஈடுபடுவார்கள் என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது பீரங்கிப்படை உருவானதை நினைவு கூரும் வகையில், இன்று பீரங்கி தினம் கொண்டாடப்பட்டது.

1827-ஆம் ஆண்டு முதல், பீரங்கிப் படைப்பிரிவு ராணுவத்தின் முக்கிய அங்கமாக செயல்பட்டு வருவதை உணர்த்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, பீரங்கிப்படைப் பிரிவை சேர்ந்த வீரர்கள், அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி வாழ்த்து தெரிவித்தார்.

பீரங்கிப்படை பிரிவில் பணியாற்றி வீர மரணமடைந்தவர்களின் தியாகத்தை போற்றும் வகையில், புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பீரங்கிப்படை தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜெனரல் Adosh Kumar, சுயசார்பு இந்தியா எனும் தாரக மந்திரத்தை பின்பற்றி, பீரங்கிப்படை பிரிவு தற்போது நவீனப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் Kanker மாவட்ட வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒரு பெண் உட்பட மூன்று மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அங்குள்ள திரியார்பாணி பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த உளவு தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், அப்போது மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தியதையடுத்து, அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

உயிரிழந்த மாவோயிஸ்டுகளிடமிருந்து ஆயுதங்கள், புகைப்பட கருவி மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக காவல்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியாவின் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கைக்கு ரஷ்யா முழு ஆதரவு அளித்து வருவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Sergey Lavrov தெரிவித்துள்ளார்.

ஐ நா பொதுச்சபையில் உரையாற்றிய பின்னர், நியூயார்க்கில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்,

அமெரிக்கா உட்பட பிற நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள பிணைப்பு, ரஷ்யா – இந்தியா உறவில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று கூறினார்.

எரிசக்தி வர்த்தகம் தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரின் அறிக்கையை சுட்டிக்காட்டிய திரு Sergey Lavrov, கச்சா எண்ணெயை எங்கிருந்து வாங்குவது என்ற முடிவு ஒரு நாட்டின் இறையாண்மையை சார்ந்தது என்று குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

அங்கு நீர்நிலை அருகே இருந்த ஒரு உணவகத்தின்மீது படகில் வந்த ஒரு நபரால் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் அம்மாகாண காவல்துறை தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், தாக்குதல் நடத்திய நபரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

குஜராத், மத்திய மகாராஷ்ட்ரா மற்றும் கொங்கன் பகுதியின் ஒரு சில இடங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், கர்நாடகாவின் கடலோரப்பகுதி மற்றும் அம்மாநிலத்தின் வடக்குப்பகுதி, கிழக்கு ராஜஸ்தான், கேரளா, மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், தெலங்கானா, விதர்பா மற்றும் மேற்கு மத்தியப்பிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தான் எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

-----------------

உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ***50*** மீட்டர் பிரிவில் ***Anushka Thokur*** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ***50*** மீட்டர் பிரிவில் ***Adriyan Karmakar*** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை ***4*** தங்கம், ***6*** வெள்ளி, ***3*** வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

-----------------

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக ***Mithun Manhas*** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

------------------

சீன ***Smash*** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ***Manav Thakkar, Sreeja Akula*** மற்றும் ஆகாஷ்பால் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<END>>>>>>